தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 அக்டோபர் 2003

## தமிழக வரலாற்று மாநாடு

"ஒரு நாட்டின் வரலாறு, உணர்வுகள் அடிப்படையில் உருவாக்கப்படக்கூடாது. உண்மையின் அடிப்படையில் முதன்மைச் சான்றுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும்'' எனத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

10-10-2003 அன்று பூண்டி புட்பம் கல்லூரியில் நடைபெற்ற தமிழக வரலாற்று மாநாட்டில் தமிழ்ப்




பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய உரையில், ''வரலாறும் தமிழ் இலக்கியமும் இணைந்து செல்ல வேண்டும். புதிய பார்வைகளைத் தோற்றுவிக்க இம் மாநாடு உதவும். வரலாறு, காலந்தோறும் நிகழ்ந்த சமூக மாற்றங்களை அறிந்து கொள்ள உதவும். மானுடத்தை மையமாகக் கொண்டதாக வரலாறு அமைய வேண்டும். மனித குல மேம்பாட்டுக்கு உதவுவதாக வரலாற்று அறிவு அமைய வேண்டும். வரலாறு, சமூக, கலை, இலக்கியப் பண்பாட்டு எழுச்சியையும், வீழ்ச்சியையும் காட்டும். பழங்காலச் சான்றுகளைக் கையாளும்போது இக்கால நிலைகளால் நாம் பாதிக்கப்படுகிறோம். வரலாற்று ஆய்வு முறைகள் காலத்துக்கேற்ப மாறுபடும். நம் முன்னோர்கள் வரலாற்று உணர்வுடன் எது முக்கியம் என்று பாதுகாத்து வைத்தனர். கோயில்கள், கல்வெட்டுகள் போன்றவற்றைப் பாதுகாத்தனர். இந்த வரலாற்றுச் சமூக ஆவணங்களையும் பண்டைய காலச் சான்றுகளையும் ஆய்வு செய்யும்போது இருவகைக் கூறுகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒன்று தற்கால அறிவியல் புரட்சி. அடுத்து ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வு முறைகள். தேசிய எழுச்சி காரணமாகப் பொதுப் பண்பாடு, பொது நாடு என்ற தேசியக் கொள்கைகள் உருவாயின. 18-ஆவது நூற்றாண்டில் ஐரோப்பாவில் இத்தகைய தேசியப் பார்வை உருவானது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுடனான ஐரோப்பிய உறவு காலனிய உறவாக மாறிய பின் அவர்கள் ஆட்சி நிர்வாகத்தை நடத்துவதற்காகவே வரலாறுகளை உருவாக்கினர். அசோகர் கல்வெட்டுக்களில் சேர, சோழ, பாண்டியர்கள் மற்றும் சத்தியபுத்திரர்கள் குறித்த குறிப்பு உள்ளது. சங்க இலக்கியங்களை மட்டுமே மையமாக வைத்துத் தமிழக வரலாற்றின் சகல கூறுகளையும் வெளிப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சங்க இலக்கியங்கள் தமிழ்ப் பிராமி எழுத்துகள் குறித்துக் கூறவில்லை. ரோமானியர்களுடன், தமிழக வணிகர்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் கிரேக்க மொழியில் உள்ளது. அது தற்போது ஆஸ்திரிய நாட்டின் தலைநகரான வியன்னாவில் உள்ளது. தமிழர்கள் ரோம நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது இதன்மூலம் தெரியவருகிறது. தமிழகத்தில் அதிகப் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டது கொடுமணல் அகழ்வாய்வாகும். தமிழகத்தில் வரலாற்றின் இருண்ட காலம் என்று ஒன்றில்லை என்பது தற்போது தெரிய வந்துள்ளது. முதன்மைச் சான்றுகளைத் தேடித் தமிழகத்தின் வரலாற்றை மீள் உருவாக்கம் செய்யவேண்டும். தொழில்மயச் சூழல் மாறும்போது சமூக மதிப்பீடுகளும் மாறுபடுகின்றன'' என்றார். தொடக்க விழாவுக்குக் கல்லூரி முதல்வர் டி.கே.கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். வரலாற்று மாநாட்டின் தலைவர் என்.கே.நாராயணன், பொதுச்செயலர் பி.ஜெகதீசன், முனைவர் கே.ராஜய்யன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஒரு பல்கலைக்கழகத்தின் வலக்கண் அதன் கற்றறிந்தடங்கிய பேராசிரியச் சான்றோர்கள். அதன் இடக்கண் நூல்நிலையம். மூன்றாவது கண் அதன் தரமான பெருமை தரும் வெளியீடுகள்.

-முனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

### அக்டோபர் 2003இல்... நடைபெற்ற நிகழ்வுகள்

| | |
|---|---|
| 14.10.2003 | - அயல்நாட்டுத்தமிழ்க்கல்வித்துறை-புத்தொளிப்பயிற்சி நிறைவு விழா |
| 15.10.2003 | - தத்துவத்துறை-சுற்றுலாவிழிப்புணர்வு-கருத்தரங்கம் |
| 16.10.2003 | - இந்தியமொழிகள்பள்ளி- புத்தொளிப்பயிற்சி - தொடக்கவிழா |
| 22.10.2003 | - புலத்தலைவர்கள் கூட்டம் - வளாகமேம்பாடு |
| 29.10.2003 | - இசைத்துறை-ஆபிரகாம்பண்டிதர் அறக்கட்டளை |
| 30.10.2003 | - இலக்கியத்துறை-திணையரங்கம் |

புத்தொளிப் பயிற்சி

## புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா



பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன் 24.09.2003 அன்று முதல் நடைபெற்று வந்த புத்தொளிப்பயிற்சியின் நிறைவு விழா 14.10.2003 அன்று நடைபெற்றது. விழாவிற்குத் தலைமையேற்ற தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தமிழாராய்ச்சி வளர்ச்சி வரலாற்றோடு அயல்நாட்டவரின் ஆய்வுப்பணிகள் பின்னிப்பிணைந்திருப்பதை எடுத்துரைத்து, சிறப்பாகத் திருக்குறள் ஆய்வில் அயல்நாட்டவர்களின் பணிகளை விளக்கியுரைத்தார். பயிற்சியாளர்கள் ஐவர் கருத்துரை நிகழ்த்தினர்.

புத்தொளிப்பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி நிறைவுரை நிகழ்த்திய சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ அவர்கள் தம் உரையில், ''உலகளாவிய சிந்தனையைக் கொண்டது தமிழ்மொழி; நிலம், தீ, நீர், வளி, விசும்பு என ஐந்தும் கலந்த மயக்க உலகம் எனத் தொல்காப்பியம் உலகத்தை வரையறை செய்கிறது. உலகில் பிற நாடுகளில் இந்தக் கருத்து கி.பி.7ஆம் நூற்றாண்டில்தான் தோற்றம் பெற்றது. ஆனால் தொல்காப்பியர் கி.மு.5ஆம் நூற்றாண்டிலேயே இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். பண்பாட்டு வழி, மொழி வழி, இலக்கிய வழி, வரலாற்று வழி, தமிழ்நாட்டுக்கும் பிற மாநிலங்களுக்கும் உலக நாடுகளுக்கும் என்ன தொடர்பு உள்ளது என்பதை ஆய்வு செய்ய வேண்டும். கி.பி.12-ஆம் நூற்றாண்டு வரை தமிழுக்கும் மற்ற நாடுகளுக்கும் நட்பு இருந்தது. கி.பி.17-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு உலகம் முழுவதும் தமிழர்கள் பரவினர். தென்ஆப்பிரிக்கா, மொரீசியஸ், மலேசியா, பிஜித்தீவு எனப் பல நாடுகளுக்கும் சென்று பல்வேறு துன்பங்களுக்கு ஆளானார்கள். தென்கிழக்கு ஆசியா முழுவதும் தமிழனின் ஆட்சி பரவியிருந்தது. இராசராசசோழனின், இராசேந்திரசோழனின் சாதனை இது. பல நாடுகளில் சோழர்கால இலக்கிய பண்பாட்டுச்சுவடுகள் காணப்படுகின்றன. இவற்றை ஆய்வு செய்யவேண்டும்'' என்றார்.

துறைத்தலைவர் முனைவர் ஆ.கார்த்திகேயன் வரவேற்புரையும் முனைவர் சா.உதயசூரியன் நன்றியுரையும் ஆற்றினர்.

-அயல்நாட்டுக்கல்வித்துறை

## முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| | ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|---|
| 1. | க.முத்துக்குமரவேல்<br>தொல்லறிவியல்துறை | Studies on the Toxocity of Heavy Metals in the Estuarine Hermit crab clibanarius infraspinatus (HILGENDORF) | 01-10-2003 |
| 2. | டி.தனவதி<br>சிற்பத்துறை | தஞ்சை நகர வைணவக் கோயில்கள் - ஓர் ஆய்வு | 03-10-2003 |
| 3. | க.ஜகந்நாதன்<br>சித்தமருத்துவத்துறை | Evaluation of Anti ulcer properties Trianthema Decandra and complication of Siddha literatures related to peptic ulcer and its Drugs | 08-10-2003 |
| 4. | இரா.இந்து<br>அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை | தமிழ்வழிப் பொறியியல் கல்வி கணிப்பொறியின் பங்கு | 10-10-2003 |
| 5. | ச.முருகபூபதி<br>நாடகத்துறை | சுதந்திரப் போராட்டகாலத் தமிழ் நாடகங்களும் மதுரகவி பாஸ்கரதாசும் | 10-10-2003 |
| 6. | த.அனுராதா<br>அரியகையெழுத்துச்சுவடித்துறை | மனித மேம்பாட்டிற்குப் பெரியாரின் சிந்தனைகள் | 15-10-2003 |
| 7. | இரா.புகழேந்தி<br>நாட்டுப்புறவியல்துறை | நாட்டுப்புற மகளிர் உணவுப் பழக்கவழக்கங்கள் | 17-10-2003 |
| 8. | ஜி.சம்பத்குமார்<br>தொல்லறிவியல்துறை | Investigations of Va-mycorrhizal Fungi Associated with some medicinal plants of Madurai District and their Influence on micropropagation of Cardio-spermum halicababum.L. | 22-10-2003 |
| 9. | இரா.உமாமகேசுவரி<br>இலக்கியத்துறை | சங்க இலக்கியத்தில் சிற்றிலக்கியத்தின் கூறுகள் | 22-10-2003 |
| 10. | சி.அய்யாப்பிள்ளை<br>நாட்டுப்புறவியல்துறை | மன்னை வட்டாரத்தில் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள் | 31-10-2003 |
| 11. | கோ.பிரேமானந்தன்<br>புதுவைமொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுவை | சிலப்பதிகாரம் மணிமேகலை பெண்மையின் நாடகம் (குறியியல் ஆய்வு) | 31-10-2003 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

## ஆபிரகாம் பண்டிதர் அறக்கட்டளை

# இசைப்போட்டி மற்றும் சொற்பொழிவு



தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையினரால் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புல அரங்கில் ஆபிரகாம் பண்டிதர் அறக்கட்டளை இசைப் போட்டியும், சொற்பொழிவும் 29.10.2003 அன்று நடத்தப்பட்டன. இசைப்போட்டியில் ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய பாடல்கள் பாடப்பட்டன. இதில் தஞ்சையைச் சுற்றியுள்ள பள்ளி மாணவியர்கள் பங்கேற்றனர். முன்னதாகப் போட்டியின் நெறிமுறைகளை இசைத்துறைத் தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் விளக்கினார். போட்டிக்கு நடுவர்களாக திருமதி செ.லலிதாம்பாள், விரிவுரையாளர், இசைத்துறை, சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி, திருச்சி), செல்வி சி.சத்தியவதி (முனைவர் பட்ட ஆய்வாளர்), திரு வா.உதயகுரர் (நிகர்நிலைக் கண்காணிப்பாளர், இலக்கியத்துறை) ஆகியோர் இருந்தனர்.

பிற்பகலில் சொற்பொழிவும், பரிசளிப்பு விழாவும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றன. இசைத்துறைத் தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். போட்டியில் பங்கேற்ற மாணவிகளுக்கு முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் ஸ்ரீவெங்கடேசுவரா மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளி மாணவி செல்வி ஆர்.மோனிஷா என்பவர் முதல் பரிசும், பெண்கள் கிறித்துவ மேனிலைப்பள்ளி மாணவி செல்வி பி.சுவீட்லின் பெனினால்மேரி என்பவர் இரண்டாம் பரிசும், ஸ்ரீவெங்கடேசுவரா மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளி மாணவி செல்வி ஆர்.ஜெயலெஷ்மி என்பவர் மூன்றாம் பரிசும் பெற்றனர். மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை உரையாற்றி, பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பரிசு பெற்ற மாணவியர்களை வாழ்த்திப் பேசினார். ஆபிரகாம் பண்டிதரும் சமகால இயலி சைப்புலவர்களும் என்ற தலைப்பில் பாண்டிச்சேரி இயலிசை அறிஞர் கலைமாமணி பி.எம்.சுந்தரம் அவர்கள் உரையாற்றினார். விழாவின் மற்றுமொரு நிகழ்ச்சியாகக் கலைமாமணி பி.ஆர்.திலகம் அவர்களால் இசையமைத்துப் பதிப்பிக்கப்பட்ட வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீசுப்பராமைய்யர் தமிழ்ப் பதங்கள் என்ற நூலும் துணைவேந்தர் அவர்களால் வெளியிடப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவாகத் திருமதி இரா.மாதவி, நன்றி கூறத் துறை மாணவியரின் நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

**-இ.அங்கயற்கண்ணி, இசைத்துறை**

# இந்திய மொழிகள் பள்ளி



இந்திய மொழிகள் பள்ளியின் சார்பில் நடைபெறும் புத்தொளிப்பயிற்சியின் தொடக்கவிழா 16.10.2003 அன்று நடைபெற்றது. பயிற்சிவகுப்பில் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் இருபது பேராசிரியர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். இவ்விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் இப்பயிற்சி வகுப்பின் ஒருங்கிணைப்பாளரும் இந்திய மொழிகள் பள்ளியின் தலைவருமாகிய முனைவர் வே.சா.அருள்ராஜ் அவர்கள் வரவேற்றார். இவ் விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கித் தலைமையுரை ஆற்றினார். அவர்தம் உரையில் இந்திய இலக்கணம் மற்றும் இலக்கிய மரபுகள் இக்கால நிலைவரை எவ்வாறு வளர்ந்து வந்துகொண்டிருக்கின்றன என்பதையும். இந்திய மொழிகள், இந்திய இலக்கியங்கள், இலக்கியத்தில் கவிதை இலக்கியம் பற்றியும் சிறப்பாக உரையாற்றினார். பேரா.முனைவர் சு.இராசாராம் அவர்கள் மையக் கருத்துரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் மரபு என்றால் என்ன என்பதையும் அதனுடைய பிரதிகளையும் தெளிவாகக் கூறினார்கள். மேலும் அவர் தொல்காப்பிய மரபு என்று நாம் பொதுவாக கூறுகிறோம். அதற்கு முன்னரும் பல மரபுகள் நிலவி வந்துள்ளன என்பதை என்ப, என்மனார் புலவர் போன்ற சொற்களின்மூலம் நம்மால் அறியமுடிகிறது என்றார். எனவே முதல் நூலாகத் தொல்காப்பியத்தை எண்ணவேண்டியதில்லை. அதற்கு முன் உள்ள அகத்தியத்தை எடுத்துக்கொண்டு அகத்திய மரபை முதல் மரபாகக் கொள்ளலாம் என்றார். இந்திய மொழிகள் பள்ளியின் முனைவர் இரா.முரளிதரன் நன்றி கூற நாட்டுப்பண்ணோடு இனிதே நிறைவுற்றது.

**-முனைவர் வே.சா.அருள்ராஜ்**

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

நிருவாக அலுவலர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

## சுற்றுலா விழிப்புணர்வு விழா




தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவமையம், தஞ்சை மாவட்டச் சுற்றுலா அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் 15.10.2003 அன்று பல்கலைக்கழகத்தில் சுற்றுலா விழிப்புணர்வு விழாவினை நடத்தியது. இவ்விழா, கருத்தரங்கம், கண்காட்சி, கலைநிகழ்ச்சி என மூன்று நிலைகளில் நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். ''வரலாற்றைப் புரிந்துகொள்ள சுற்றுலா உதவுகிறது. சுற்றுலா அனைவரையும் மிகவும் கவர்ந்த ஒரு பயணமாக இருக்கிறது. சுற்றுலாப் பயணம் அறிவுத் தேடலை அளிப்பதாகும். தொடக்க காலத்தில் பயணம் என்பது நம்மையறியாமல் நிகழ்ந்திருக்க வேண்டும். பின்புதான் பயணம் என்பது திட்டமிட்ட ஒன்றாக அமைந்தது. சுற்றுலா என்பது சமயச்சுற்றுலா, இன்பச்சுற்றுலா, கல்விச்சுற்றுலா என்றெல்லாம் பலநிலைகளில் மாற்றம் பெற்றது. பிற நாடுகளுக்குச் சென்று பணியாற்றுபவர்களின் பயணங்கள் கூட முக்கியமானதாக அமைகிறது. எனவே பயணத்தின் நோக்கம் அறிவுத்தேடல், ஆன்மீகத்தேடல், வணிகத்தேடல் போன்றவையாக அமையும். சுற்றுலா பண்பாட்டினைப் போற்றி வளர்க்கிறது. பழைய புராதன இடங்களெல்லாம் வெறும் சுற்றுலா இடங்களல்ல, பண்பாட்டுச் சின்னங்களாக அவை மிளிர்கின்றன. இப்படிப்பட்ட பண்பாட்டினை அறிந்து அவற்றினைக் காக்க உதவும் உணர்வு இளைய தலைமுறையினர்களுக்கு மிகவும் தேவை என்பதால் இத்தகைய சுற்றுலா விழிப்புணர்வு விழாக்கள் மிகவும் அவசியமாகின்றன'' என்று குறிப்பிட்டார். தத்துவ மைய இயக்குநர் முனைவர் க.பாஸ்கரன் வரவேற்றார். தஞ்சை மாவட்டச் சுற்றுலா அலுவலர் திரு இராதாகிருட்டிணன், கலைவரலாற்று ஆய்வாளர் முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர். மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை தஞ்சை மணிமண்டபத்தில் தத்துவ மையத்தில் பயிலும் முதுகலைப்பட்ட மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. தஞ்சைக் கோட்டம் கலை பண்பாட்டுத்துறை உதவி இயக்குநர் திரு முத்து கலைநிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார். நாடகத்துறைத் தலைவர் முனைவர் க.இரவீந்திரன் வாழ்த்துரை வழங்கினார்.

---

## இரத்ததான முகாம்

தத்துவமையத்தில் 21.10.2003 அன்று குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. முகாமினைத் தொடங்கிவைத்து உரையாற்றிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள், இரத்ததானம் செய்வது மனிதநேயமிக்க செயல் என்றும், உயிர் கொடுக்கும் கொடை என்றும் கூறினார். மேலும் மருத்துவர்களை இறைவனுக்கு இணையாக கூறுவார்கள். அதுபோன்று ஆபத்தான காலத்தில் உயிர் கொடுக்கும் நிலையாக அமையும் இரத்ததானமும் இறைநிலையினைப் பெற்றது போன்றதாகும் எனவும் குறிப்பிட்டு, மருந்தாளுநர் என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் முன்பே பயன்படுத்தப்பெற்றுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டினார். தஞ்சை மருத்துவக்கல்லூரி சிறுநீரகத்துறைத் தலைமை மருத்துவர் டாக்டர் மோகன்தாஸ் அவர்கள் இரத்ததானத்தின் அவசியத்தினை எடுத்துக்கூறினார். நமது இரத்தத்திலுள்ள சிவப்பணுக்கள் குறிப்பிட்ட காலத்தில் தானே அழிந்துவிடும் என்றும் பின் புதிய அணுக்கள் உற்பத்தியாகும். எனவே இரத்ததானம் செய்வது என்பது உடல்நலத்திற்கு கேடு விளைவிப்பது அல்ல என்று கூறி, தற்போதைய ஆய்வுகளின்படி பெண்களைவிட ஆண்களுக்கு அதிகளவில் இரத்தசோகை இருப்பதாகவும் அதற்குக் காரணம் போதைப்பொருட்கள், மது, சிகரெட் ஆகியன பயன்படுத்துதல் எனவும் அவற்றை முழுமையாகத் தவிர்க்க வேண்டுமெனவும் தெரிவித்தார். விழாவில் டாக்டர் சண்முகசுந்தரம் வாழ்த்துரை வழங்கி இரத்த சேமிப்பின் அவசியத்தினையும், முறைகளையும் விரிவாக எடுத்துக்கூறினார். தத்துவ மைய இயக்குநர் முனைவர் க.பாஸ்கரன் வரவேற்று, மாணவர்களுக்கு இரத்ததானம் செய்வது பற்றிய அச்சங்களையெல்லாம் போக்கி, இளைஞர்களிடம் இரத்தக் கொடையின் சிறப்புகளை வெளிப்படுத்தும் விழிப்புணர்வு முகாம்கள் அவசியமான நிலையில் உள்ளதால் இதுபோன்ற முகாம்கள் ஏற்பாடு செய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இம்முகாமில் தத்துவ மைய முதுகலைப்பட்ட மாணவர்கள் அறுபதிற்கும் மேற்பட்டோருக்கு இரத்தவகைப் பிரிவு கண்டறியப்பட்டது.

## உழவாரப் பணி

உழவாரப் பணி ஒரு சமுதாயப்பணி என்பதை மாணவர்கள் உணரும் பொருட்டு 08.10.2003 அன்று தத்துவம், திருக்கோயில் நிருவாகம் மற்றும் சுற்றுலாவியல் பயிலும் முதுகலைப்பட்ட மாணவர்கள் உட்பட அறுபதிற்கும் மேற்பட்டோர் தஞ்சை வடக்கு விதியிலிருக்கும் அரண்மனை தேவஸ்தானத் திற்குரிய அருள்மிகு இராச கோபாலசுவாமி ஆலயத்தைத் தூய்மை செய்தனர். காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணிவரை கோயில் தூய்மைப் பணியினை மேற்கொண்ட மாணவ, மாணவியர்கள் அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார்கள். பல்கலைக்கழகத் துணைவேந்தரவர்களும், அரண்மனை தேவஸ்தான அறங்காவலர் மூத்த இளவரசர் அவர்களும், அரண்மனை தேவஸ்தான உதவி ஆணையர் திரு கோவிந்தராம் அவர்களும் மிகவும் பாராட்டி ஊக்கப்படுத்தினர்.

– க.பாஸ்கரன், தத்துவ மையம்

பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை